## DEPOSITION OF WITNESS

## (Chapter XXIII Code of Criminal Procedure )

## IN THE COURT OF THE ADDITIONAL SUBORDINATE COURT, HOSUR

S.C. Case No : 13/2021

Deposition of witness for Prosecution : Pw1

Defence :

Name : Saravanan
Father's Name :
Village :
Taluk :
Caste :
Calling :
Religion :
Age :

Solemnly affirmed and on date 27.10.2021 in accordance with the provision with the Act of 1983.

முதல் விசாரணை:

நான் ராயக்கோட்டை ஹவுசிங் போர்டில் குடியிருக்கிறேன். ஜே.எம்.ஜே இன்டஸ்ட்ரிசில் சூப்பரைசராக 2006 -2007 முதல் வேலை செய்து வருகிறேன். எதிரியை எனக்குத் தெரியும். 28.12.12 அன்று இரவு 11 மணி அன்று நான் ஜேஎன்ஜே இன்டஸ்ட்ரியில் சின்ன எலசகிரி காமராஜர் நகரில் வேலை பார்த்துக்கொண்டிருந்த போது ஆஜர் எதிரி 407 வண்டியில் டிவிஎஸ் கம்பெனியில் இருந்து பொருட்களை எடுத்துக்கொண்டு வந்தார். அந்த லாரியின் ப திவெண் டிஎன் 20ஆர் 2364. எதிரிபொருட்களை இறக்க சொன்னார் நாங்கள் எப்பொழுதும் பொருட்களை எண்ணி பார்த்து விட்டு தான் இறக்குவோம். நாங்கள் எண்ணி பார்த்துவிட்டு இறக்குவதாக சொன்னோம். எதிரி நேரமாகி விட்டது.இல்லையென்றால் சென்று விட்டு நாளை வருகிறேந் என்று சொன்னார். வண்டியை எடுத்து சென்றுவிட்டார். நான் எனது உரிமையாளர் அந்தோனிசாமிக்கு லோடு இறக்காததை பற்றி போன் பண்ணி சொன்னேன். அவர் டிவிஎஸ் எஸ்எப்எல் கம்பெனிக்கு லோடு இறக்காததை பற்றி போன்பன்னி சொன்னார். மறுபடியும் அரை மணி நேரம் கழித்து சுமார் 11.30 மணிக்கு லாரி கம்பெனிக்கு வந்தது. பொருட்களை இறக்கும் படி ஆஜர் எதிரி சொன்னார். நாங்கள் பொருட்களை கணக்கு பார்த்து இறக்கிக்கொண்டிருந்தோம்.அப்பொழுது எதிரி தகாத வார்த்தைகளால் பேசினார். தேவடியா பசங்க கம்பெனிக்கு வந்தால் லேட் ஆகியது. என்று சொன்னார். நாங்க்ள பொருட்களை இறக்கி விட்டோம். எதிரியிடம் நீ எதுவும் பேசாதே வண்டியை

எடுத்து செல் என்று சொன்னேன். நான் உரிமையாளருக்கு போன் செய்து சொன்னதால் தான் எதிரியின் உரிமையாளர் திட்டியதாக சொல்லி அவர் எடுத்த வந்த லாரியின் அவர் அமரும் இடத்தில் இருந்து அருவாள் எடுத்து வந்து இதோடு செத்துப்போ என்று எனதுஇடது புற கழுத்தில் வெட்டினார். அதில் எனக்கு கழுத்தில் காயம் ஏற்பட்டது. எதிரி பயன்படுத்திய அருவாளை பார்த்தால் என்னால் அடையாளம் காட்ட முடியும். நீதிமன்றத்தில் உள்ள அறுவாள் தான் எதரி சம்பவத்தின் போது பயன்படுத்தியது. அந்த அருவாள் சா.போ.1. என்னுடன் வேலை செய்பவர்கள் என்னை இஎஸ்ஐ மருத்துவமனை ஓசூருக்கு என்னை எடுத்து சென்றார்கள். என்னை வெட்டியவுடன் எதிரி டெம்போவை எடுத்துக்கொண்டு ஓடிவிட்டார். இஎஸ்ஐ மருத்துவமனயில் முதலுதவி செய்துகொண்டு அரசு மருத்துவமனை ஓசூருக்கு சிகிச்சைக்காக சென்றேன்.அங்கிருந்து செயின்ட் ஜான்ஸ் மருத்துவமனை பெங்களூருக்கு சிகிச்சை சென்றேன். நான் செயின்ட் ஜான்ஸ் மருத்துவமனையில் சிகிச்சையில் இருக்கும் போது போலிசார் வந்தார்கள். போலிசாரிடம் நான் நடந்ததைசொன்னேன். போலிசார் எழுதிக்கொண்டு என்னிடம் கையெழுத்து வாங்கினார்கள். என்னிடம் காட்டப்பபடும் புகார் வாக்குமூலத்தில் என்னுடைய கையெழுத்து உள்ளது. அந்த புகார் வாக்குமூலம் அரசு தரப்பு சான்றாவணம் 1. போலீசார் என்னை விசாரித்தார்கள். சம்பவம் நடக்கும் போது இரவு சுமார் 11 1/2லிருந்து 12 மணி இருக்கும்.

குறுக்கு விசாரணை:

எனக்கு தமிழ் எழுதப்படிக்கத் தெரியும். 2 போலிசார் வந்து செயின்ட் ஜான்ஸ் மருத்துவமனயில் என்னை விசாரித்தார்கள். புகார் வாக்குமூலத்தை படித்து பார்த்து தான் கையெழுத்துப்போட்டேன். நான் சொன்னதை தான் எழுதியுள்ளார்கள். எதிரி சுமார் 2 வருடமாக எங்கள் கம்பெனிக்கு பொருள் எடுத்து வந்தார். சம்பவத்திற்கு முன்பு பொருள் எடுப்பது தொடர்பாக எனக்கும் எதிரிக்கும் எந்த தகராறும் வந்ததில்லை. எங்கள்கம்பெனிக்கு ஒவ்வொரு வண்டியும் வரும்போதும் போகும் போதும் ட்ரிப்சீட் வழங்குவோம் என்று சொன்னால் சரிதான். வரும்போது வாகனத்தை ஓட்டிவருபவர்களே ட்ரிப்சீட் எடுத்து வருவார்கள். அதில் சீல் போட்டு கையெழுத்து போட்டு கொடுப்போம். ஒவ்வொரு முறை பொருள் எடுத்து வரும் நேரத்தை குறிப்பிட்டு ட்ரிப்சீட்டில் சீல் போட்டு கையெழுத்து போட்டு கொடுப்போம். எதிரி சம்பவத்தன்று எங்கள் கம்பெனிக்கு வந்ததற்கான ட்ரிப்சீட்டை நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. அன்று அவர் ட்ரிப் சீட் எடுத்து வந்து என்னிடம் கையெழுத்து வாங்கவில்லை. செக்யூரிட்டியம் இரவு நேரங்களில் பணியில் இருக்க மாட்டார். இரவு நேரங்களில் பொருட்களை ஏற்றிக்கொண்டு வாகனங்கள் வந்தால் எனது உதவியாளர்கள் போய் திறந்துவிட்டு மீண்டும் பூட்டிவிடுவார்கள். சம்பவத்தன்று எத்தனை முறை எதிரி எங்கள் கம்பெனிக்கு வந்து பொருள் இறக்கினார் என்று எனக்குத் தெரியாது. நான் அன்று இரவு ஷிப்ட் பணி பார்த்தேன். எதிரி வந்த லாரியின் எண் டிஎன் 20ஆர்2364. எதிரி எடுத்து வந்த வாகனத்தின் நிறம் எனக்கு ஞாபகம் இல்லை. என்னிடம் காட்டப்படுவது எதிரி எடுத்து வரும் டரிப்சீட் என்று சொன்னால் சரிதான். அந்த ட்ரிப்சீட் ஜெராக்ஸ் நகல் -எதிரி சான்றாவணம் 1. (மேற்படி ஆவணம் அரசு தரப்பு ஆட்சேபணையுடன் குறியீடு செய்யப்பட்டது). எதிரி சான்றாவணம் 1ன் படி இரவு 9.45 மணிக்கு பொருட்களை ஏற்றிக்கொண்டு எதிரி எஸ்எப்எல் நிறுவனத்தில் இருந்து வெளியே வந்துள்ளார். எதிரி

சான்றாவணம் 1ன் படி இரவு 10.10க்கு எங்கள் நிறுவனத்திற்கு எதிரி வந்துள்ளார் என்று சொன்னால் சரிதான். நான் சொல்வது போல் இரண்டு முறை எதிரி வந்திருந்தால் அது பற்றி எதிரி சான்றாவணம் 1ல் குறிப்பிடப்பட்டிருக்கும் என்று சொன்னால் 2வது முறை வந்த போது பிரச்சனை ஏற்பட்டதால் குறிப்பிடப்படவில்லை. எதிரி ஒரு முறை தான் எங்கள் நிறுவனத்திற்கு வந்தார் என்று சொன்னால் சரியல்ல. இரண்டு முறை வந்தார். 2ம் முறை வந்திருந்தால் அது தொடர்பான ஆவணங்களை நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்திருப்பேன் என்று சொன்னால் சரியல்ல. வழக்கமாக நிறுவனத்திற்கு வரும் பொருட்களை எனது உதவியாளர்கள் இறக்கி வைப்பார்கள். எங்கள் கம்பெனிக்கு உதிரி பாகங்கள் அனுப்பி வைக்கப்படும். எதிரி சான்றாவணம் 1ன் படி காலை 6.45 மணிக்கு எதிரி எங்கள் நிறுவனத்திற்கு பொருள் எடுத்து வந்தார் என்று சொன்னால் சரிதான். எங்கள் கம்பெனிக்கு எஸ்எப்எல் கம்பெனியில் இருந்து ம ட்டும் தான் பொருட்கள் வரும். ஆனால் வேறு வேறு ஓட்டுநர்கள் அதை எடுத்து வருவார்கள். எஸ்எப்எல் கம்பெனியில் பொருட்கள் அனுப்பும் போது அதன் எடை சரிபார்த்து தான் அனுப்புவார்கள் என்ற சொன்னால் சரிதான். நாங்க்ள எங்கள் கம்பெனிக்கு வரும்போது பொருட்களை எண்ணி தான்இறக்குவோம். பொருட்களை இறக்கியவர்க்ள பெயர் ஆரோக்யராஜ்,சதீஷ்,பூபாலன். இரவு நேரங்களில் எங்கள் கம்பெனிக்கு பொருள் ஏற்றிக்கொண்டு வண்டிகள் வருவது வழக்கம். எதிரியும் எங்கள் நிறுவனத்திற்கு இரவு நேரங்களில் பொருட்களை எடுத்து வந்து கொடுத்துள்ளார். எதிரி என்னை கழுத்தில் வெட்டினார். எனக்கு தையல் போடப்பட்டது. எதிரி சா.போ.1 ஐ லாரியில் இருந்து எடுத்து வரும் போது நான் பார்த்தேன். எதிரி எடுத்து வந்த வானத்தின் புகைப்படம் என்னிடம் காட்டப்படுவது தான். அந்த புகைப்படங்கள் 3எண்ணிக்கை ___ எதிரி சான்றாவணம் -2 வரிசை. சம்பவத்திற்கு பின்பு கம்பெனியில் இருந்து போலிசார் தான் லாரியை எடுத்து சென்றார்கள் என்று சொன்னால் சரிதான். வண்டியை போலிசார் எடுக்கும் போது லாரியின் கண்ணாடிகள் உடைக்கப்பட்டிருந்தது என்று சொன்னால் அது எனக்குத் தெரியாது. நான் சொல்வது போல் எதிரி என்னை வெட்டவில்லை என்றும் நான் ஆரோக்ய ராஜ்,ஜான் ஆகியேர் சேர்ந்து எதிரியை அடித்தோம் என்று சொன்னால் சரியல்ல. எதிரி வழக்கமான நேரத்திற்கு வந்தார் என்றும் நான் சொல்வது போல் இரவு 11.30 மணிக்கு எங்கள் கம்பெனிக்கு வரவில்லை என்று சொன்னால் சரியல்ல. எதிரி பொருட்களை எண்ணி இறக்கும்படி சொன்னதால் நானும் எனது உதவியாளர்களும் சேரந்து எதிரியை அடித்தோம் என்று சொன்னால் சரியல்ல. எதிரியை அடித்து கம்பெனியில் இருந்து விரட்டிவிட்டு அவரது வண்டியை சேதப்படுத்தினோம் என்று சொன்னால் சரியல்ல. நாங்கள் எதிரியை தாக்கிய போது ஏற்பட்ட தள்ளுமுள்ளில் நான் கீழே விழுந்ததில் எனக்கு காயம் ஏற்பட்டது என்று சொன்னால்சரியல்ல. எதிரி சுமார் 2 அடி தூரத்தில் இருந்து என்னை வெட்டினார். தற்போது சாட்சி ஒரு மீட்டர் தூர்தில் இருந்து எதிரி என்னை வெட்டினார் என்று சொல்கிறார். என்னை எதிரிவெட்டியபோது லோடு இறக்கிக்கொண்டிருந்தவர்கள் சுமார் 4 மீ தொலைவில் லோடு இறக்கிக்கொண்டிருந்தார்கள். நான் சொல்வது போல் எதிரி என்னை வெட்டியிருந்தால் லோடு இற்கைி கொண்டிருந்தவர்கள் தடுத்திருப்பார்கள் என்று சொன்னால் சரியல்ல. எதிரி என்னை வெட்டுவதற்கு எந்த முன் விரோதமும் இல்லை என்று சொன்னால் இல்லை. முதலில் இஎஸ்ஐ மருத்துவமனை ஓசூருக்கு சிகிச்சை சென்றேன். அதன்பின்பு நான்

அரசுமருத்துவமனை ஒசூருக்கு சென்றேன். இஎஸ்ஐ மருத்துவமனியில் இருந்து தான் என்னை அனுப்பி வைத்தார்கள். செயின்ட் ஜான்ஸ் மருத்துவமனயீல் நான் 3 அல்லது 4 நாட்கள் சிகிச்சை பெற்றேன். டிஸ்ஜார்ஜ் சம்மரி வழங்கினார்கள். அ தை நான் படித்து பார்த்தேன். செயின்ட் ஜார்ஜ் மருத்துவமனை டிஸ்ஜார்ஜ் மருத்துவமனயில் எனக்கு ஏற்பட்டது கீறல் காயம் என்ற சொல்லியுள்ளார்கள் என்று சொன்னால் அது எனக்குத் தெரியாது. எதிரி என்னை கத்தியால் வெட்டியிருந்தால் எனக்கு வெட்டுக்காயம் ஏற்பட்டிருக்கும் என்று சொன்னால் சரியல்ல. நான் எதிரி மீது பொய் புகார் கொடுத்துள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. எதிரி என்னை வெட்டியிருந்தால் எனது கழுத்து துண்டாகியிருக்கும் என்று சொன்னால் சரியல்ல. சா.போ.1 2 கிலோ எடை இருக்கும் என்று சொன்னால் சரிதான். சா.போ.1 ஐ பயன்படுத்தி எதிரி என்னை வெட்டியிருந்தால் எனக்கு பலத்த வெட்டுக்காயம் ஏற்பட்டிருக்கும் என்று சொன்னால் சரியல்ல.

மறு விசாரணை இல்லை.